<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ., பி.எல்.,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண் : 168/2023**

**நாள் : 08.03.2024** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சதீஷ்குமார் | தொழில் | : |
| த/பெ | : பொன்னுசாமி | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

<u>முதல் விசாரணை –</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன். 20.06.2021– வாதிக்கு பிரதிவாதி ரூ.15,00,000/– க்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் வா.சா.ஆ.1, 09.02.2023– வாதியானவர் பிரதிவாதிக்கு தன் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு நகல் வா.சா.ஆ.2, மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3, 22.09.1984– வாதியும் அவரது குடும்பத்தினரும் செய்து கொண்ட பாகப்பத்திர கணிணி நகல் வா.சா.ஆ.4, 04.01.2022– வாதியும், அவரது குடும்பத்தினரும் சேர்ந்து பொன்னுச்சாமி என்பவருக்கு விற்பனை செய்த கிரைய ஆவண கணிணி நகல் வா.சா.ஆ.5, 04.01.2022– வாதியும் அவதது குடும்பத்தினரும் சேர்ந்து பொன்னுச்சாமி என்பவருக்கு விற்பனை செய்த கிரைய ஆவண கணிணி நகல் வா.சா.ஆ.6, 27.01.2023– சொத்து தொடர்பான வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.7, பிரதிவாதியின் சொத்து சம்மந்தமான வரைபட நகல் வா.சா.ஆ.8,

தாவா சொத்துக்களின் மூன்று வரைபடங்களின் நகல் வா.சாஆ.9, 09.03.2023 – பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பி பதில் அறிவிப்பு வா.சா.ஆ.10, 11.03.2023– வாதியானவர் வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய மறு பதில் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.11. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

Sd/– V.ஜான்மினோ,B.A.,B.L.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.